# அயகம பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 பெப்ரவரி 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 யூன் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் அயகம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அயகம பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 4,240,917 தொகையான வைப்புக்கள் ரூபா 2,787,920 தொகையாகவும், மீளாய்வாண்டின் போது விடுவிக்கப்பட்ட ரூபா 2,405,454 தொகையான பிணை வைப்புக்கள் ரூபா 3,197,319 தொகையாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தமையினால் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 2,244,862 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,402,258 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 226,099 ஆக இருந்தது

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

10 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,209,406 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,178,259 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 188 | 164 | 106 |
| (ii) | வாடகை | 1,286 | 1,288 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 262 | 270 | 5 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,129 | 16,676 | (6,404) |

**2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,450,584 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 544,986 |

**2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் போது கூறுவிலைகள் கோரப்படாமல் ரூபா 43,750 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்ட உபகரண விபரங்களுடன் இணங்கவில்லை.

**2.5 ஒப்பந்த நிருவாகம்**

அயகம றாஹுல மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தின் முடிவில் பக்கச்சுவர் பகுதியை நிர்மாணிக்கும் வேலையின் மதிப்பீட்டின் வேலை விடய இல. 05 இல் பக்கச்சுவரின் நீளம் 75 இற்காக ரூபா 217,400 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது சுவரின் நீளம் 71 அடி ஆனமையால் ரூபா 17,363 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் ரூபா 756,697 தொகையான காலாவதியான வைப்புக்களை வலுவிழப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 96,640 பெறுமதியான பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தினை விஞ்சி அறவீடுகள் நிலுவையாக இருந்த ஊழியர் கடன் முற்பண கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 61,045 ஆக இருந்ததுடன் பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 89,500 ஆக இருந்தது.

(ஈ) வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 நிதியத்தின் குறைவான பயன்பாடு

37 செலவின விடயங்களில் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 427,000 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு